நாள்: டிசம்பர் 08, 2013

## <u>சட்டமன்ற தேர்தல் முடிவுகளும்- 2014 மக்களவைத் தேர்தலும்</u>

அருண் ஜெய்ட்லி
எதிர்கட்சி தலைவர் (மாநிலங்களவை)

நான்கு மாநில சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் இன்று அறிவிக்கப்பட்டன. அந்த முடிவுகள் பிஜேபி கட்சிக்கார்ர்களுக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் திருப்தியை அளித்திருக்கிறது. மத்திய பிரதேசம் பிஜேபியின் சிறந்த நிர்வாகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு. அதன் பிரதிநிதியாகப் பொறுப்பேற்று திரு. சிவராஜ் சிங் சவுஹன், அந்த மாநிலத்தை அதன் அசல் ‘பிமாரு(bimaru)’ நிலையிலிருந்து மாற்றி முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்றார். அதன் செயல்பாடுகள் கணிசமாக அதிகரித்த்தோடு சமூக நலத் திட்டங்களும் பெரும் வெற்றியை அடைந்தன. பிஜேபி தன் நிலையை மூன்று தேர்தல்களிலும் தன் ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகளைக் களைந்து தக்க வைத்துக்கொண்ட்து.

பிஜேபி பாரம்பர்ய வலிமை பெற்றிராத சட்டீஸ்கரிலும் மத்திய பிரதேசத்தின் நிலையை விடாமுயற்சியினால் பெற்றுள்ளது. பிஜேபி தனக்கான வலிமையைத் தக்கவைத்துக்கொண்டு ஒரு அரசை உருவாக்கும் நிலையை மூன்றாவது முறையாக வெற்றிகரமாகப் பெற்றிருக்கிறது. சட்டீஸ்கர் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய இரண்டு மாநிலங்களிலும் 2018 வரை பிஜேபி ஆட்சி தொடர்ந்தால், 20 ஆண்டுகளுக்கு முன் 1998இல் தான் காங்கிரஸ் அவ்விரு மாநிலங்களில் பெற்ற கடைசி வெற்றி என்ற பெருமை சேரும்.

ராஜஸ்தானின் வெற்றி பிஜேபிக்கு மிக முக்கியமான வெற்றி. வசந்துர ராஜின் தலைமை இந்த வெற்றிக்கு முக்கிய காரணம். இந்த மாநிலத்தில் நடந்த தேர்தல் பிரச்சாரத்திற்கு பிறகு, பிஜேபியின் வெற்றி பிரகாசமாக இருக்கிறது எனக் குறிப்பிட்டிருந்தேன். பிஜேபி வரலாற்றிலேயே ஒரு பெரிய

மாநிலத்தில் அதிகமான பெரும்பான்மையைப் பெற்றிருப்பது இதுதான். நாம் 82% இடங்களில் வெற்றிப் பெற்றிருக்கிறோம்.

டெல்லியில், நாம் ஒரு பெரிய கட்சியாகவும் குறிப்பிடத்தக்க பெரும்பான்மை பலத்தோடு இருந்தாலும், இப்போது அங்கு பெற்றுள்ள தேர்தல் முடிவு நம் எதிர்பார்த்ததற்கு குறைவுதான். நாம் வெற்றிபெற்றுள்ள இடங்களுக்கு மேலாக இன்னும் 5 லிருந்து 6 இடங்களில் வெற்றியை எதிர்ப்பார்த்தோம். ஆம் ஆத்மி கட்சியின் முதல் தேர்தல் முயற்சியையும் அதன் வெற்றியையும் நாங்கள் மனமார்ந்து வாழ்த்துகிறோம். ஆம் ஆத்மி கட்சியின் தேர்தல் பிரச்சாரங்கள் மக்களால் கவனிக்கப்பட்டுள்ளன, ஏனெனில் அதன் பிரச்சார அணுகு முறை தீவிரமாக இருந்தது. ஆனால் இன்னும் அது தன்னை இந்த வெறுப்பு அரசியல் மற்றும் குறைசொல்லல் பிரச்சாரங்களுக்கிடையில் தொடர்ந்து பயணித்து நீண்ட காலம் தன் வளர்ச்சியைத் தக்கவைத்துக்கொள்ள முடியுமா என்பதை சோதித்துக்கொள்ள வேண்டும். கட்சியை ஒருங்கிணைத்து வெற்றிக்கு வழிநடத்திய கட்சி தலைவர் திரு. ராஜ்நாத் சிங் அவர்களுக்கும் என்னுடைய நன்றியும் வாழ்த்துக்களும் உரித்தாக்குகிறேன். அனைத்து மாநிலங்களிலும் தன் தீவிரமான பிரச்சாரத்தை மேற்கொண்ட திரு. நரேந்திர மோதியும் எங்களின் மிகுந்த பாராட்டுக்குரியவர்.

இப்போது கிடைத்துள்ள வெற்றிகள் வரும் மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரங்களை நம்பிக்கையுடன் தீவிரப்படுத்த எங்களை ஊக்குவிக்கின்றன. தேர்தல் நடந்து முடிந்த இந்த மாநிலங்களில் மொத்தம் 72 பாராளுமன்ற இடங்கள் உள்ளன. அவற்றில் வெகு சிலவற்றில்தான் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது. கணக்கு போட்டு பார்த்தால், பிஜேபி அவற்றில் கிட்டதட்ட 65 இடங்களில் வெற்றியடைந்திருக்கிறது. வரும் மக்களவை தேர்தலில் பிஜேபி மற்றும் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளுக்கிடையில்தான் போட்டி அதிகமிருக்கும். இப்போது கிடைத்துள்ள தேர்தல் முடிவுகள் எதிர்கால வெற்றியின் அறிகுறியாகத்தான் தெரிகிறது. நடைபெற்ற சட்டமன்ற

தேர்தல்களில் எங்கள் வெற்றி விகிதம் மொத்தத்தில் 70சதவீதத்தை நெருங்குகிறது. இது சாதாரண வெற்றி இல்லை.